**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.180/2021

Deposition of witness for PW2

| | | |
|---|---|---|
| Name | : | மஜீத் |
| Father's Name | : | சேக் மதார் |
| Village | : | பூலாங்குடியிருப்பு |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.02.2026.

<u>முதல் விசாரணை:</u>

நான் பூலாங்குடியிருப்பு ஜமாதின் தலைவராக பொறுப்பு வகிக்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் அழைப்பாணையில் கோரிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

1. எங்கள் ஜமாதில் பராமரிக்கப்படும் திருமண பதிவேட்டில் ஹாஜாமுகைதீன் மற்றும் அகிலா ஆகியோரின் நிக்காஹ் பதிவு புத்தகத்தின் அசலை சமர்ப்பிக்கிறேன். அசல் ஒப்பிடப்பட்டு அதன் நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.13 ன் படி 17.07.2016 ம் வருடம் வாதி மற்றும் பிரதிவாதியின் திருமண பதிவு எங்கள் ஜமாதின் ஆவண எண்.189 ஆக பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.13 ன் படி ஹாஜா முகைதீன் 200 கிராம் தங்க நகை அகிலாவிற்கு தருகிறார்.

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**</u>

1. 17.07.2016 ம் வாதி மற்றும் பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்று எங்கள் ஜமாதில் பதிவு செய்யப்பட்ட போது நான் தலைவராக

இல்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.13 ல் குறிப்பிடப்பட்டுள்ள 200 கிராம் தங்க நகையானது மணமகன் வீட்டார் எங்களால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல நாங்கள் சரிபார்ப்போம். எவ்வாறு சரிபார்ப்பீர்கள் எடை போட்டு பார்ப்பீர்களா என்றால் ரசீதை பார்ப்பார்கள்.

3. வா.சா.ஆ.13 என்னால் எழுதப்படாததால் ரசீது சரிபார்த்தார்களா இல்லையா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 200 கிராம் நகை உள்ளது என்பதை சரிபார்ப்பதற்கு ஜமாதில் எடை போடும் கருவி உள்ளதா என்றால் நகையை கையில் வைத்தால் தோராயமாக எடை தெரியும்.

4. நான் நகை செய்யும் ஆசாரி இல்லை என்பதால் நான் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45ன் கீழ் நகை மதிப்பீட்டாளராக இல்லாததால் என்னால் தோராயமாக எடை போடமுடியாது என்றும் மணமகன் வீட்டார் கூறியதன் அடிப்படையிலேயே 200 கிராம் என பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி